**செய்தி வெளியீடு எண்: 759** **நாள்: 16.12.2012**

செய்தி வெளியீடு

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கை தரம் உயர, கட்டமைப்பு மேம்பாடு வழி வகுக்கிறது. மாநிலத்தில் உள்ள கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த சாலைக் கட்டமைப்பு வசதிகள் பெரிதும் துணைபுரிகின்றன. சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்தி நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், 3,793 கோடி ரூபாய் மதிப்பில் புதுச் சாலைகள் மற்றும் புதிய ரயில்வே மேம்பாலங்கள் அமைப்பதற்கும், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரிப்பதற்கும் கடந்த ஆண்டு உத்தரவிடப்பட்டது.

இந்த ஆண்டு, 340.68 கோடி ரூபாய் மதிப்பில், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் மற்றும் ஏனைய மாவட்டங்களில் மேம்பாலங்கள், பாலங்கள், சுரங்க நடைபாதைகள், ஆகாய நடைபாதை ஆகியவற்றை அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், இந்த ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் சாலை உட்கட்டமைப்பு பணிகளுக்காக 2,262 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்கள் பல இடங்களில், ரயில்வே இருப்புப்பாதைகளை கடந்து செல்ல வேண்டியுள்ளது. சாலை மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் இல்லாத இடங்களில், வாகனங்கள் ரயில்வே கடவுகளில் அதிக நேரம் காத்திருந்து பயணங்களை தொடர வேண்டியுள்ளதால், பயண நேரம் அதிகமாதல், காலவிரயம் ஏற்படுதல், எரிபொருள் விரயம் மற்றும் விபத்துகள் ஏற்படுகின்றன.

இதனைக் கருத்தில் கொண்ட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இருப்புப்பாதை குறுக்கிடும் சாலைகளில் 322.37 கோடி ரூபாய் செலவில், புதிய ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் பணிகள் 8 மாவட்டங்களில் மேற்கொள்ள அனுமதி அளித்துள்ளார்கள்.

அதன் முதற்கட்டமாக வேலூர் மாவட்டம், அன்வர்திகான்பேட் ரயில் நிலையத்திற்கு அருகில் கீழ்வீதி-அமீர்பேட்டை சாலையில் ஒரு சாலை மேம்பாலம், கடலூர் மாவட்டம், பண்ருட்டி மற்றும் நெல்லிக்குப்பம் ரயில் நிலையங்களுக்கிடையே கடலூர்-சிட்டூர் சாலையில் ஒரு சாலை மேம்பாலம், திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம்-திருச்சி டவுன் ரயில் நிலையங்களுக்கு இடையே காவேரி சாலையில் ஒரு சாலை மேம்பாலம், ராமநாதபுரம் மாவட்டம், ராமநாதபுரம்-உச்சுப்புளி ரயில் நிலையங்களுக்கிடையே ராமநாதபுரம்-கீழக்கரை சாலையில் ஒரு சாலை மேம்பாலம், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மற்றும் செய்துங்கநல்லூர் ரயில்வே நிலையங்களுக்கிடையே, பாளையங்கோட்டை-சிவந்திப்பட்டி சாலையில் ஒரு சாலை மேம்பாலம், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மற்றும் அக்கரைப்பட்டி ரயில் நிலையங்களுக்கிடையே திண்டுக்கல்-குஜிலியம்பாறை-கரூர் சாலையில் ஒரு சுரங்கப்பாதை, திண்டுக்கல் மற்றும் அக்கரைப்பட்டி ரயில் நிலையங்களுக்கிடையே BCC சாலையில் ஒரு சாலை மேம்பாலம் மற்றும் மதுரை

திண்டுக்கல் ரயில் நிலையங்களுக்கு இடையே சோழவந்தான்-வலையப்பட்டி சாலையில் ஒரு சாலை மேம்பாலம் ஆகிய 8 சாலை மேம்பாலங்கள் அமைப்பதற்காக ஆரம்ப கட்டப்பணிகள் மற்றும் நில ஆர்ஜித பணிகளுக்காக 70 கோடியே 3 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவிற்கிணங்க பொதுமக்களின் நலனுக்காக தமிழகமெங்கும் எண்ணற்ற சாலை கட்டமைப்பு வசதி திட்டங்களை செயல்படுத்தி வருகின்ற நெடுஞ்சாலைத்துறைக்கென தனியாக, இத்துறையின் அனைத்து தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணந்த தலைமைப் பொறியாளர் அலுவலகத்தினை 13 கோடியே 21 லட்சத்து 28 ஆயிரத்து 400 ரூபாய் செலவில் கட்ட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த ஒருங்கிணைந்த அலுவலகம், சென்னை கிண்டியில் நெடுஞ்சாலைத்துறையின் தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அலுவலகம் தற்பொழுது இயங்கி வரும் வளாகத்திலேயே அமைக்கப்படும். இந்த அலுவலகம் 3 தளங்களை கொண்டதாகவும், 7,256 ச.மீ தரை பரப்பளவு கொண்டதாகவும் இருக்கும்.

கோவை நகரில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து, அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இப்போக்குவரத்து நெரிசலை தவிர்த்து, பொது மக்கள் பயன் பெறும் வண்ணம் தேசிய நெடுஞ்சாலையில் (NH 209), கணபதி, டெக்ஸ்டூல் தொழிற்சாலைக்கு அருகில் 20 கோடி ரூபாய் மதிப்பிட்டில் கூடுதல் இருவழி சாலை மேம்பாலம் அமைக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மன்னார்குடி நகரம் திருவாரூர் மாவட்டத்தின் முக்கியமான நகரமாகும். இங்கு புகழ்பெற்ற ராஜகோபாலசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இந்நகருக்கு அருகில் வேளாங்கண்ணி, நாகூர் தர்கா, போன்ற திருத்தலங்களும் அமைந்துள்ளன. இத்திருத்தலங்களை காண வரும் சுற்றுலா பயணிகளால் வாகனங்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும் இந்த நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் வேளாண்மை பொருட்கள் மற்றும் உப்பு அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் இப்பகுதிகளில் இப்பொருட்களை விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்லும் வாகனங்களின் போக்குவரத்தும் அதிக அளவில் உள்ளது. தற்போது உள்ள சாலையில் பெரிய வாகனங்கள் செல்ல முடியாமல் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே பெருகி வரும் வாகன நெரிசலை குறைக்கவும், தடையில்லா போக்குவரத்தினை ஏற்படுத்தவும், கும்பகோணம்-மன்னார்குடி-அதிராமபட்டினம் சாலையில், மன்னார்குடி நகருக்குள் நுழையாமல் புறவழியாக செல்வதற்காக 23.48 கி.மீ. நீளமுள்ள வட்டச் சாலை ஏற்படுத்த 96.24 ஹெக்டேர் நிலங்களை, நில எடுப்பு செய்வதற்காக 10 கோடியே 6 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் மன்னார்குடி நகருக்குள் நுழையும் வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவில் குறையும்.

இதேபோன்று, திருச்சி மாவட்டத்திலுள்ள மண்ணச்சநல்லூர், அரிசி ஆலைகள், அரசு அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா இடங்கள் நிறைந்துள்ள நகரமாகும். இதனால் இந்நகரில் ஏற்படும் வாகன போக்குவரத்து அதிகரிப்பினால் போக்குவரத்து நெரிசல் அதிக அளவில் ஏற்படுகின்றது. எனவே பெருகி வரும் வாகனப் போக்குவரத்தினை கருத்தில் கொண்டு, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மண்ணச்சநல்லூர் நகரில்

2.62 கி.மீ நீளமுள்ள இருவழிப் புறவழிச்சாலை திருச்சி-துறையூர் சாலையில் அமைக்க 6.58 ஹெக்டேர் நிலங்களை நிலம் எடுப்பு செய்ய 14 கோடியே 40 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி நகரம், முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகும். இங்கு ஆண்டுதோறும் திருவிழாக்கள் நடைபெறுவதாலும், திருப்பதிக்குச் செல்லும் வழியில் உள்ளதாலும், இங்கு வாகனப் போக்குவரத்து மிகுந்து காணப்படுகிறது. மேலும், தொழிற்சாலைகள் மிகுந்த அரக்கோணம், இதற்கு அருகில் அமைந்துள்ளதாலும், இப்பகுதியில் வாகனப் போக்குவரத்தின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் திருத்தணி நகரில் போக்குவரத்து நெரிசல் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றது. இதனை தவிர்க்க சட்ராஸ்-செங்கல்பட்டு-காஞ்சிபுரம்-அரக்கோணம்-திருத்தணி சாலையில், திருத்தணிக்கு அருகில் 10/4 கி.மீ. இடத்திலிருந்து 3.241 கி.மீ நீளமுள்ள புறவழிச்சாலை அமைப்பதற்காக 9.11.0 ஹெக்டேர் நிலம் நிலஎடுப்பு செய்வதற்கு 11 கோடியே 61 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தூத்துக்குடி நகரம் மாநகராட்சி அந்தஸ்து பெற்ற நகரமாகும். இந்த நகரில் பெரிய துறைமுகம் அமைந்துள்ளது. இத்துறைமுகத்திலிருந்து பொருட்களை ஏற்றுமதி செய்யவும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதற்காகவும் அதிக அளவில் வாகனங்கள் நகருக்குள் வந்து செல்கின்றன. மேலும் இந்நகரம், தமிழகத்தில் விரைவாக அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகின்ற நகரமாகும். எனவே பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் சாலை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது மிகவும் இன்றியமையாததாகும்.

எனவே, தூத்துக்குடி – கொல்லம் சாலையில் 2 கிலோ மீட்டர் - 6 கிலோ மீட்டர் வரை உள்ள பகுதியை அகலப்படுத்தி, கடினப் புருவங்களுடன் கூடிய நடுத்தடுப்பு மற்றும் நடைமேடையுடன் 3 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் இருவழிச் சாலையாக உள்ள மதுரை-தூத்துக்குடி சாலையை பலவழித்தடமாக அகலப்படுத்துத்துவதற்கும், அச்சாலையை மறுகட்டமைப்பதற்கும், 11 கோடியே 60 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் நிறைவேற்றப்படவிருக்கும் சாலை கட்டமைப்பு பணிகளினால், மாநிலத்தின் சாலை போக்குவரத்து மேன்மை அடைவதுடன், பொது மக்களும் பெரிதும் பயன் அடைவர்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 16.12.2012.